**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051831

1. District : மாவட்டம் மதுரை | PS: காவல்நிலையம் ஊ.த.க.பா.மா | Year: ஆண்டு 2021 | FIR No.: மு.த.அ. எண் 01/2021 | Date: நாள் 07.01.21

2. (i) Act சட்டம்: PC Act 1988 as
(ii) Act சட்டம்: amended by the PC
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

Sections பிரிவுகள்: 7 of PC Act 1988
Sections பிரிவுகள்: as amended by the
Sections பிரிவுகள்: PC (Amendment) Act 201

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 06.01.2021 | Date to : நாள் வரை —

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 17.15 hrs | Time to : நேரம் வரை 20.45 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.01.2021 | Time : நேரம் 11.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 07.01.2021 | Time : நேரம் 11.30 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக [illegible]

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 15 கி.மீ தென்கிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி தோட்டக்கலை வளர்ச்சித் திட்ட அலுவலர் அலுவலகம், உலக வங்கி உதவிபெறும் தோட்டக்கலை வளர்ச்சித் திட்டப்பணிகள் - 3வது திட்டம், நீர்வள நிலத்துறை, திருப்பரங்குன்றம் ரோடு, [illegible], மதுரை.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. R. திருமலை
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. இராமகிருஷ்ணன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் மாவட்ட திட்ட ஆய்வுக்குழு அலுவலர்
(g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மதுரை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) திரு. M.P.R.S. சேகரன், வயது 37/2021, த/பெ முத்துப்பாண்டியன், உதவி அலுவலர், மாவட்ட அரசு தோட்டக்கலைத் துறை, மதுரை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதம் இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed K. Kumaraguru Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS V.RAC, Madurai on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 7/1/2021

A. Kannan
Inspr, VRAC

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 07/01/202

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

07.01.2021 at 1400 hrs.

Name: பெயர் A. KANNAN
Rank: நிலை Inspector of Police, No. எண் ........
VRAC, Madurai.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :

இன்று 07.01.2021-ம் தேதி, நான் (அ. கண்ணன்), காவல் ஆய்வாளர், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.R.திருமலை அவர்கள் என்னிடம் கொடுத்த புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணவங்களைப் பார்வையிட்டதில் புகார் மனுவில் உள்ள விபரம் பின்வருமாறு : அனுப்புநர் R.திருமலை, துணைஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க.எண். 383 / 2021 / I1, நாள் : 07.01.2021 அய்யா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - சமூகநலத்துறையின் கீழ் செயல்படும் உலகவங்கி உதவிபெறும் குழந்தை வளர்ச்சித் திட்டப்பணிகள் - 3வது திட்டம், நிலையூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள திருப்பரங்குன்றம் வட்டார குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் அலுவலகத்தில் 06.01.2021-ம் தேதி மேற்-கொண்ட திடீர் இணை ஆய்வு - தனி அறிக்கை அனுப்புதல் - மேல் நடவடிக்கை வேண்டுதல் குறித்து. பார்வை : மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திடீர் ஆய்வு குறிப்புரை, நாள்: 06.01.2021.நேற்று 06.01.2021-ம் தேதியன்று, மதுரை மாவட்டம் நிலையூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள சமூக நலத்துறையின் கீழ் செயல்படும் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் அலுவலகத்தில் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை அங்கன்வாடி பணியாளர்களின் கணக்கு வழக்கை தணிக்கை செய்யும் அலுவலில் மாநில தணிக்கைத்துறை உதவி ஆய்வர் திரு. குணசேகரன் என்பவர் மேற்கொள்வதாகவும், தணிக்கையின் போது அங்கன்வாடி பணியாளர்களிடம் தடையில்லாமல் தணிக்கை நிறைவு செய்ய லஞ்சம் பெறுவதாகவும் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மதியம் சுமார் 14.00 மணி முதல் மேற்படி அலுவலக வளாகத்தை தொடர்ந்து கண்காணித்த போது, அங்கன்வாடி பொறுப்பாளர்களும், மேற்பார்வையாளர்களும் உரிய பதிவேடுகளுடன் தணிக்கையில் கலந்து கொண்டு லஞ்சம் கொடுத்துவிட்டு வெளியில் செல்வது தெரியவந்தது. அதைத்தொடர்ந்து, மாலை சுமார் 17.15 மணியளவில், நானும், மதுரை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர்கள் A. கண்ணன், T. சூரியகலா மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம், மேற்படி அலுவலகத்தின் உள்ளே சென்ற போது, நடைபாதையின் தெற்கே அமைந்திருந்த இரண்டு அறைகளில் முதல் அறையில் அமர்ந்திருந்த பெண் அலுவலரிடம் அறிமுகம் செய்து கொண்டு, விசாரித்த போது, அவர் தனது பெயர் திருமதி. சுகந்தி என்றும், தான்

மேற்படி அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணியாற்றுவதாகவும், தங்கள் அலுவலக குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலரான திருமதி. வித்யா அவர்கள், மேலமடையில் உள்ள தங்கள் அலுவலகத்திற்கு சென்றிருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், தனது அறைக்கு மேற்கே உள்ள பயிற்சி கூடம் என்ற அறையில் உள்ளூர் தணிக்கை குழு உதவி ஆய்வர் அங்கன்வாடி மைய கணக்கை தணிக்கை செய்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். அதன் பேரில் பயிற்சி கூட அறையை பார்வையிட்ட போது, அங்கு ஒரு ஆண் அலுவலர் இருக்கையில் அமர்ந்தும், 11 பெண் அங்கன்வாடி பணியாளர்கள் தரையில் அமர்ந்த நிலையில் ஆய்வு நடைபெற்று கொண்டிருந்தது. தொடர்ந்து, மேற்படி ஆய்வு செய்து கொண்டிருந்த அலுவலரிடம் அறிமுகம் செய்து கொண்டு, அவரிடம் விசாரித்த போது, தனது பெயர் குணசேகரன் என்றும், தான் மாநில அரசு தணிக்கைத்துறை, மதுரை மாவட்டத்தில் உதவி ஆய்வராக பணியாற்றுவதாகவும், இன்று முதல் திருப்பரங்குன்றம் வட்டாரத்தில் உள்ள 197 அங்கன்வாடி மையத்தில் உள்ள, கடந்த மூன்று ஆண்டுகளுக்கான கணக்குகளை தணிக்கை செய்ய வந்திருப்பதாகவும், இன்று அவனியாபுரம் மற்றும் கருவேலம்பட்டி தொகுதிகளுக்கு உட்பட்ட53 அங்கன்வாடி மையங்களுக்கான தணிக்கையை செய்து கொண்டு இருப்பதாகவும் தெரிவித்தார். அவரிடம் தணிக்கை நடைபெற்று கொண்டிருக்கும் அறையில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்வதாக சொன்னவுடன், அவர் சற்று பதற்றம் அடைந்தார். தொடர்ந்து, அவரை சோதனை செய்த போது, அவர் தனது பேண்ட் பையில் இருந்த பர்ஸிலிருந்து பணம் ரூ.300/-யை எடுத்து ஆஜர் செய்தார். அதை தனது சொந்த பணம் என்று சொன்னதால் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. தொடர்ந்து, அவர் அமர்ந்திருந்த இருக்கையை சோதனையிட்ட பின்னர், மேஜையின் மீதிருந்த அவரது கருப்பு நிற கைப்பையில் உள்ள பொருட்களின் விபரம் குறித்து கேட்ட போது, அவர் சற்று பதற்றமடைந்து, மேற்படி கருப்பு நிற கைப்பையின் நடுப்பகுதியை திறந்து அதனுள்ளேயிருந்து, ஒரு காக்கி நிற நீளமான ஆபிஸ் கவரிலிருந்து 3 கத்தைகள் பணத்தை எடுத்து என்னிடம் ஆஜர் செய்தார். அதனை எண்ணிப் பார்த்ததில், முதல் கத்தையில் ரூ.21,250/-ம், இரண்டாம் கத்தையில் ரூ.2,250/- மற்றும் மூன்றாம் கத்தையில் ரூ.2,500/- ஆக மொத்தம் ரூ.26,000/- இருந்தது. மேற்படி காக்கி நிற கவரின் மீது 6.1.21 என தேதியிட்டு, அவனியாபுரம் தொகுதி, திருப்பரங்குன்றம், நாகமலை புதுக்கோட்டை மற்றும் பணம் குறித்த விபரங்கள் எழுதப்பட்டிருந்தன. மேலும், மேற்படி காக்கி நிற கவரில், அவனியாபுரம் தொகுதியிலிருந்து ரூ.21,250/-ம், நாளை 07.01.2021-ம் தேதி தணிக்கை செய்யப்படவேண்டிய திருப்பரங்குன்றத்தில் உள்ள மூன்று மையங்களில் இருந்து

ரூ.2,250/-ம், நாகமலை புதுக்கோட்டையில் உள்ள இரண்டு மையங்களிலிருந்து ரூ.2,500/-ம் பெற்ற விபரங்களை அவனியாபுரம் தொகுதியில் பணியாற்றும் மீனாட்சிநகர் அங்கன்வாடி பணியாளர் திருமதி. மாஜிபின் பீபி மேற்படி காக்கி நிற கவரின் மீது எழுதி, அந்த கவரில் வைத்து, தன்னிடம் தணிக்கை முடிந்தவுடன் கொடுத்ததாகவும் அதனை பெற்று தனது கருப்பு நிற கைப்பையில் வைத்திருந்தாகவும் தெரிவித்தார். தொடர்ந்து விசாரணை செய்த போது, அவனியாபுரம் தொகுதியில் உள்ள 27 அங்கன்வாடி மையங்களையும், திருப்பரங்குன்றம் தொகுதியில் உள்ள நெல்லையப்பபுரம், கோட்டைத்தெரு, ராஜீவ்காந்தி நகர் மற்றும் நாகமலை புதுக்கோட்டையில் உள்ள புதுக்குளம்பிட், காமாட்சிபுரம் ஆகிய மையங்களையும் தணிக்கை செய்த பின்னர், அவற்றில் எவ்வித தணிக்கை தடையும் பதிவு செய்யாமல் இருப்பதற்கு ஓர் ஆண்டிற்கு ரூ.250/- வீதம் கடந்த 2017-18, 2018-19 மற்றும் 2019-20 ஆகிய மூன்று நிதியாண்டுகளுக்கு ஒவ்வொரு அங்கன்வாடி பணியாளரிடம் இருந்து தலா ரூ.750/- வாங்கி மேற்படி தொகை இருந்த கவரை வாங்கி, தனது கருப்பு நிற கைப்பையில் வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அத்துடன் அவனியாபுரம் தொகுதியில் சில மையங்களிலும், நாகமலை புதுக்கோட்டையில் சில மையங்களிலும் காணப்பட்ட தணிக்கை தடையை நீக்குவதற்கு மேற்படி மைய பணியாளர்களிடமிருந்து கூடுதலாக ரூ.2,000/- பெற்றதாகவும் தெரிவித்தார். மேற்படி மொத்த தொகை ரூ.26,000/-யை என்னிடம் சற்று முன்னர் எடுத்து ஆஜர் செய்த பணம் என்றும் தெரிவித்தார். இதுகுறித்து, விசாரிப்பதற்காக அலுவல் முடிந்து வீட்டிற்கு சென்றுவிட்ட திருமதி. மாஜிபின் பீபி என்பவர் அழைப்பின் பேரில் அலுவலகம் வந்தார். அவரிடம், நான் விசாரித்த போது, மேற்கண்ட தொகையை திரு. குணசேகரன், உதவி ஆய்வர் அவர்களின் அறிவுரைப்படி தான் ஒவ்வொருவரிடமும் தலா ரூ.750/- வசூல் செய்ததாகவும், அந்த விபரங்களை காக்கி நிற ஆபிஸ் கவரில் எழுதி திரு. குணசேகரன் அவர்களிடம் கொடுத்து சென்றதாகவும் கூறினார். மேற்கண்ட விபரங்களை உதவி ஆய்வர் திரு. குணசேகரன் மற்றும் திருமதி. மாஜிபின் பீபி ஆகியோர் என் முன்னிலையில் எழுத்துப்பூர்வமான வாக்குமூலமாக எழுதி கொடுத்தனர். எனவே, மேற்கூறிய லஞ்சப்பணம் ரூ.26,000/-, 6.1.21 என தேதியிட்டு விபரங்கள் எழுதப்பட்ட காக்கி நிற நீளமான ஆபிஸ் கவர், அவை வைக்கப்பட்டிருந்த ROSHAN என அச்சடிக்கபட்டிருந்த கருப்பு நிற கைப்பை ஆகியவை மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. மேலும் ஆய்வின் போது, மேற்படி அலுவலகத்தில் ஆஜரில் இருந்த அங்கன்வாடி பணியாளர்களிடம் தனித்தனியாக விசாரித்த போது, கருவேலம்பட்டி தொகுதியில் நேதாஜி நகர் அங்கன்வாடி பணியாளர்

திருமதி. இந்திராணி என்பவர் தான் வைத்திருந்த மணிபர்சிலிருந்து, ரூ.19,500/-யும் அத்துடன் பெயர்கள் மற்றும் தொகை விபரம் எழுதப்பட்ட பட்டியலையும் எடுத்து ஆஜர் செய்தார். அவரிடம் விசாரித்த போது, திரு. குணசேகரன், உதவி ஆய்வர் அறிவுரைப்படி, தங்கள் தொகுதியில் பணியாற்றும் 26 அங்கன்வாடி பணியாளர்களிடமிருந்து தலா ரூ.750/- பெற்று மேற்படி விபரங்களை தனித்தாளில் எழுதி வைத்திருந்தாகவும், பணத்தை தணிக்கை முடிந்தவுடன், திரு.குணசேகரன் அவர்களிடம் கொடுப்பதற்கு தயாராக வைத்திருந்ததாகவும், அதற்குள் ஆய்வுக்குழுவினர் வந்துவிட்டதாகவும் சொல்லி மேற்படி பணம் ரூ.19,500/-யை எடுத்து ஆஜர் செய்தார். தொடர்ந்து, திருமதி. இந்திராணியை நான் விசாரிக்க, அவர் எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தை எழுதி கொடுத்தார். எனவே, மேற்படி தொகை லஞ்சப்பணம் ரூ.19,500/- மற்றும் பெயர்கள் மற்றும் தொகை விபரம் எழுதப்பட்ட பட்டியல் ஆகியவை மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. மேலும், திடீர் இணை ஆய்வின் போது, மேற்படி அலுவலகத்தில், தணிக்கைக்காக வந்திருந்த அங்கன்வாடி பணியாளர்களான (1) சு.லதா, (2) ப.க. உமா மகேஸ்வரி, (3) கி. சரஸ்வதி, (4) சு. சாந்தவல்லி, (5) சி. அம்பிகா, (6) கா. ஜெய்கனி, (7) க. கஸ்தூரி, (8) க. ஈஸ்வரி மற்றும் (9) ப. கலைச்செல்வி மற்றும் மேற்படி அலுவலகத்தில் இருந்த (10) அ. சுகந்தி, கண்காணிப்பாளர், (11) பா. நிஷா, இளநிலை உதவியாளர் (12) T. ஜோதி, மேற்பார்வையாளர் நிலை - 1, (13) S.தமிழரசி, மேற்பார்வையாளர் நிலை - 2 மற்றும் (14) N.புனிதா, மேற்பார்வையாளர் நிலை - 2 ஆகியோரை விசாரிக்க, அவர்கள் தனித்தனியாக எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தை கொடுத்தார்கள். மேற்படி அலுவலகத்தில் இருந்த கண்காணிப்பாளர் சுகந்தி அவர்கள் தொடர் விசாரணைக்காக, M.P.R.S. குணசேகரன், உதவி ஆய்வர், மாநில அரசுத் தணிக்கைத்துறை, மதுரை அவர்கள் குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலர், திருப்பரங்குன்றம் வட்டாரம், மதுரை அவர்களுக்கு, திருப்பரங்குன்றம் வட்டாரம் - மையத்தணிக்கைப் பணி 2017 - 20 ம் ஆண்டு அலுவலக தணிக்கைப் பணி - மேற்கொள்ளுதல் - தொடர்பாக அனுப்பப்பட்ட 21.12.2020-ம் தேதியிட்ட கடிதத்தை ஆஜர்படுத்தினார். அந்த ஆவணம் கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமான திடீர் இணை ஆய்வு குறிப்புரை இரவு 20.45 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் இணை ஆய்வு குறிப்புரையின் நகலை திரு. குணசேகரன், உதவி ஆய்வர் அவர்களுக்கு வழங்கி ஒப்புகை பெறப்பட்டது. மதுரை மாநில அரசு தணிக்கைத்துறை அலுவலத்தில் உதவி ஆய்வராக பணிபுரியும் திரு. M.P.R.S. குணசேகரன் அவர்கள் அங்கன்வாடி மைய பணியாளர்களிடமிருந்து

லஞ்சமாக பெற்ற பணம் ரூ.26,000/-, மேற்படி பணம் வைக்கப்பட்டு அங்கன்வாடி பணியாளர் மாஜிபின் பீபி என்பவரால் விபரம் எழுதப்பட்டிருந்த காக்கி நிற நீளமான ஆபிஸ் கவர், பணம் வைக்கப்பட்டிருந்த குணசேகரன் அவர்களின் ROSHAN என அச்சடிக்கபட்டிருந்த கருப்பு நிற கைப்பை, அங்கன்வாடி பணியாளர் இந்திராணி என்பவர் திரு. குணசேகரன், உதவி ஆய்வர் அறிவுரைப்படி, அங்கன்வாடி பணியாளர்களிடமிருந்து பெற்று குணசேகரனுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் ரூ.19,500/-, கருவேலம்பட்டி தொகுதி தணிக்கை தொகை விபரம் எழுதப்பட்ட பட்டியல், திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட M.P.R.S. குணசேகரன், உதவி ஆய்வர் என்பவர் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், திருப்பரங்குன்றம் வட்டாரம் அவர்களுக்கு 21.12.2020-ம் தேதியிட்டு அனுப்பிய கடிதம், சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்ட திடீர் இணை குறிப்புரை மற்றும் சம்மந்தப்பட்ட 17 அலுவலர்கள் அளித்த வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். திரு. குணசேகரன், உதவி ஆய்வர், மாநில அரசு தணிக்கைத்துறை, மதுரை அவர்கள் மீது உரிய மேல் நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம் (R. திருமலை) துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. இணைப்பு : 1) திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள். 06.01.2021. 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.45,500/-. 3) மாஜிபின் பீபி என்பவரால் விபரம் எழுதப்பட்ட காக்கி நிற நீளமான ஆபிஸ் கவர் 4) திரு.குணசேகரன், உதவி ஆய்வரின் ROSHAN என அச்சடிக்கப்பட்ட கறுப்புநிற கைப்பை 5) கருவேலம்பட்டி தொகுதி தணிக்கை தொகை விபரம் எழுதப்பட்ட பட்டியல் 6) திரு. குணசேகரன், 21.12.2020-ம் தேதியிட்டு குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், திருப்பரங்குன்றம் வட்டாரம் அவர்களுக்கு அனுப்பிய கடிதம் 7) பதினேழு அலுவலர்களின் வாக்குமூலங்கள். Sir, Received this report today (07.01.2021) at 11.00 hrs along with Joint Surprise Check Proceedings dated 06.01.2021, Cash Rs.45,500/-, Brown colour cover, ROSHAN Black colour Hand Bag, two documents and Seventeen Statements. After obtaining Permission from the Superior Officers, I (A. Kannan, Inspector of Police, V&AC, Madurai) registered a case in Madurai V&AC Cr. No. 01/2021 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 07.01.2021 at 11.30 hrs. (sdxxxx) A. Kannan, Inspr/V&AC 07/01/2021.

The Original FIR along with the report of District Deputy Inspection Cell Officer, dated 7.1.2021, Joint Surprise Check Proceedings Dated : 06.01.2021 and connected documents are submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of Cases under Prevention of Corruption Act, Madurai and other copies were sent to the officers concerned.

A. Kannan
Inspr/V&AC
07/01/2021
Inspector of Police
Vigilance and Anti-Corruption
Madurai